இந்த பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்து தங்களது கருத்துக்களை எடுத்துரைக்க வந்திருக்கும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் இப்பகுதி பொதுமக்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஏற்கனவே விரிவாக இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடத்தப்படுவதற்கான விதிமுறைகள், அதற்கான அத்தியாவசியம், அதற்கான தேவை என்பது குறித்து உங்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதன்படி, தற்பொழுது இந்த திட்ட மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இந்த குவாரி சம்பந்தமான விளக்க உரையை திட்ட ஆலோசகர் முதலில் எடுத்துரைப்பார். அதனைத் தொடர்ந்து

பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களுடைய கருத்துரைகளை எடுத்துரைக்கலாம் என வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கூறினார்.

**<u>திட்ட அலோசகர், ஜியோ எக்ஸ்பொளரேசன் மற்றும் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், தமிழ்நாடு</u>**

இந்த பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு கூடியிருந்தவர்களை வரவேற்ற அவர், திட்டத்தின் விவரங்களை கீழே குறிப்பிட்டுள்ளபடி விளக்கினார்

1. சுரங்கத்தினை பற்றி ஓர் அறிமுகம்
2. திட்டதளத்தின் இருப்பிட வரைப்படம்
3. செயற்கைக்கோள் புகைப்படம் – 500 மீ சுற்றளவு
4. வளங்கள் மற்றும் இருப்புகள்
5. நடப்பு சுரங்கங்களின் விவரங்கள் – 500 மீ சுற்றளவு
6. 10 கி.மீ.சுற்றளவில் இருக்கும் அம்சங்கள்
7. 10 கி.மீ.சுற்றளவில் இருக்கும் நிலப்பயன்பாடு
8. அடிப்படை சுற்றுச்சூழல் கண்காணிப்பு
9. மண் மற்றும் நீர் தன்மை ஆய்வு செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்
10. காற்று கண்காணிப்பு செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்
11. காற்று கண்காணிப்பு ஆய்வின் முடிவுகள்
12. ஒலி அளவு ஆய்வின் செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்
13. ஒலி அளவு ஆய்வின் முடிவுகள்
14. எதிர் பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
15. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு
16. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் ஒலி சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
17. திட்ட நன்மைகள்
18. முடிவுரை

பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கு அவர்கள் இப்போது இந்த பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் தன்னார்வலர்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம். அவ்வாறு கருத்துக்களை பதிவு செய்யும்பொழுது தங்களுடைய பெயர், தாங்கள் எந்த கிராமத்தைச் சார்ந்தவர் என்பதை தெளிவாக குறிப்பிட்டு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனக்கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்கண்ட கருத்துக்களை தெரிவித்தனர்.

1. **திரு. முகிலன் – ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், சென்னிமலை**

திருப்பூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கும் இணைந்து நடத்துகின்ற காங்கேயம் வட்டம், கீரனூர் கிராமத்தில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் புல எண்.441–ல் அமையவிருக்கின்ற விஷ்ணுகுமார் கல்குவாரி மற்றும் புல எண்.449 (பகுதி) மற்றும் 450–ல் 11 ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கின்ற திரு.சசிக்குமார் என்ற இரண்டு கல்குவாரியினுடைய கருத்து கேட்புக் கூட்டத்தினுடைய தலைவர் எங்களுடைய பெருமதிப்பிற்குரிய தாராபுரம் கோட்டாட்சியர் அவர்களுக்கும், இந்தக் கூட்டத்தை முன்னிலை வகித்து நடத்திக் கொண்டுள்ள எங்களுடைய பேரன்பிற்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், இங்கே வருகை தந்துள்ள மாசு கட்டுப்பாடு வாரியம், வருவாய்த்துறை, காவல்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறையினருக்கும் மற்றும் இந்த மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் (ஏற்கனவே, இரண்டு ரிக்டர் நில அதிர்வு வந்த இந்த கீரனூர் பகுதி அழிந்து விடக் கூடாது) என்ற பெரும் அக்கறையோடு இங்கு கலந்து கொண்டுள்ள சூழலியல் செயல்பாட்டாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் மற்றும் கல்குவாரியால் பாதிக்கப்பட்டு, தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வந்துள்ள கீரனூர், மரவபாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கும், கல்குவாரி உரிமையாளர்களுக்கும் மற்றும் கல்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும் அனைவருக்கும் நாங்கள் சார்ந்து இருக்கின்ற தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக எங்களுடைய வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

என்னுடைய பெயர் முகிலன். நான் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளராக உள்ளேன். 2014 டிசம்பர் முதல் 2015 நவம்பர் வரை மதுரை மாவட்ட கிரானைட் முறைகேடுகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட மாண்பமை உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் அமைத்த மரியாதைக்குரிய சகாயம் ஆய்வுக் குழுவிற்கு ஆதரவு இயக்கம் அமைத்து, ஓராண்டு காலம் அவரோடு உடனிருந்து பணியாற்றி, அங்கே இருந்த 89 குவாரிகளில், ஒரு லட்சத்து பதிமூன்றாயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடந்ததை ஆதாரப்பூர்வமாக வெளிகொணர்நத்தவன் மற்றும் தமிழகம் முழுக்க நடந்து கொண்டிருந்த மணல் முறைகேட்டிற்கு எதிராக குரல் கொடுத்தவன். என்னுடைய

சொந்த ஊர் ஈரோட்டுக்கு அருகே இருக்கக்கூடிய சென்னிமலை. நான் தற்போது கரூரில் வசித்து வருகிறேன்.

இந்த கருத்து கேட்புக் கூட்டமானது குவாரியால் காற்று, நீர், நிலம், ஒலி மற்றும் பல்லுயிர் சூழல், சமூகப் பொருளாதார சூழல் ஆகியவை எல்லாம் பாதிக்கும். அந்த பாதிப்பை, நாங்கள் எப்படி சரி செய்யப் போகிறோம்? என்பதற்கான கருத்துக்களை தான் ஒரு நானூறு பக்க அறிக்கையாக கொடுத்துள்ளார்கள். அதனை இங்கு பத்து நிமிடத்தில், திட்ட வடிமைப்பாளர் குவாரி உரிமையாளருக்காக அதனை PPT என்ற முறையில் விளக்கக்காட்சியாக எடுத்துக் கூறினார்கள். இந்த கருத்து கேட்புக் கூட்டம் குவாரி வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்பதற்கு அல்ல. ஏனென்று சொன்னால் EIA என்று சொல்லக்கூடிய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி செயல்படுகிறார்களா? செயல்பட முடியுமா? என்பதற்காகத் தான் இந்த கூட்டம். அதன் அடிப்படையில் எனது கருத்துக்களை முன் வைக்கின்றேன்.

முதலில் இந்த குவாரி அமைகின்ற இடம் அதாவது விஷ்ணுகுமார் கல்குவாரி அமைகின்ற புல எண். 441 அது அரசினுடைய விதிமுறையின் அடிப்படையில் இருக்கிறதா? என்று சொல்வதற்கு தான் இந்தக் கூட்டம். சிறு கனிம சலுகை வீதிகள் சட்டம் 1959 பிரிவு 36 அதில் இருக்கக்கூடிய முதல் விஷயம். எந்த ஒரு குவாரியும் குடியிருப்பு பகுதியிலிருந்து 300 மீட்டர் சுற்றளவுக்குள் அதாவது ஆயிரம் அடி தூரத்திற்குள் அமைக்கக் கூடாது என்று இதில் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்பொழுது இந்த விஷ்ணுகுமார் குவாரி அமையக்கூடிய புல எண்.441/ ஏ1 (பகுதி), ஏ2 (பகுதி), ஏ3 (பகுதி), மற்றும் ஏ4 (பகுதி) ஆகும். முதலில் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது ஏ1, ஏ2, ஏ3, ஏ4 என்று வைத்திருக்கிறார்கள். அதில் பகுதி என ஏன் வைக்கிறார்கள் என்பதுதான்? அதாவது யார் குவாரிக்கு அனுமதி கேட்டாலும், கிராம நிர்வாக அலுவலர் தயவு செய்து அதை உட்பிரிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மாவட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தப் பகுதி என்று சொல்லிவிட்டால் முழுமையான விபரம் தெரியாது. அதனால் அதன்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஐந்து ஏக்கர் பரப்பளவு கொண்ட புல எண்.441 ற்கு அருகிலுள்ள புல எண்.600, 601, 602, 603 ஆகிய புலங்களில் வீடு இருக்கிறது. இதில் இந்த குவாரி உரிமையாளருடைய வீடும் இருக்கின்றது. மேலும், இன்னொரு குவாரிக்கு அடுத்து சசிகுமார் அவர்களின் வீடு சுமார் 10 இலட்சம் மதிப்பீட்டில் பஞ்சாயத்து அனுமதி வாங்கி கட்டப்பட்ட வீடும் இருக்கிறது. அப்பொழுது சைட்டிங் கிரிட்டிரியாவில் வீடுகளை பொறுத்த வரை, ஒரு வீடு இருந்தாலே, ஊராட்சி மன்றத்தின் அனுமதி பெற்றோ அல்லது கிராம வரைபடம், புலவரைபடம், அ–பதிவேட்டில் இருந்தாலும் அது வீடு என்று பொருள்படும்.

வீட்டுமனை என்று பொருள்படும். அதில் வீடு இருந்தாலும் அல்லது இடிக்கப்பட்டு இருந்தாலும், குவாரிக்காரர்கள் வாங்கி இருந்தாலும், வேறு நபர்கள் வாங்கியிருந்தாலும், அந்த வீடு இடிந்து போயிருந்தாலும் கூட அது வீடு என்ற பொருள்படும் என்று தெளிவாக அரசாணை அடிப்படையில், ஈரோடு மாவட்ட நிர்வாகம் 02.09.2024 அன்று ஈரோடு மாவட்டத்தினுடைய உதவி இயக்குனர் (நில அளவைத்துறை) அவர்கள் அனைவருக்கும் இதன் அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் என்று தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், UDR நத்தம் மற்றும் நில அளவை வரைபடம் பதிவேடுகளில் பதிவுகள் செய்யப்பட்டுள்ள வீடு சிதிலமடைந்தோ அல்லது இடிந்திருந்தாலோ, அது ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே பதியப்பட வேண்டும் என்றும் கல்குவாரி தொடர்பான தூர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டுமனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம், புல வரைபடம் மற்றும் அ-பதிவேடு ஆகியவற்றை சரிபார்த்தே வழங்க வேண்டும் என்ற உத்தரவை வழங்கியுள்ளார்.

நில அளவை ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின் அடிப்படிடையில், நாமக்கல் மாவட்டத்தில் 11.7.2024ல் இந்த உத்தரவை கொடுத்துள்ளார்கள். எனவே இந்தக் குவாரியை சுற்றி புல எண்.600, 601, 602, 603 ஆகிய புலங்களில் வீடு இருப்பதால், இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் சிறு கனிம சலுகை விதிகள் தெளிவாக சொல்கிறது, உள்ளாட்சி அமைப்புகள், மத்திய அல்லது மாநில அரசு துறைகள் அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியங்கள் ஆகிய ஏதாவது ஒன்றின் நீரேற்றும் அமைப்புகள், நீர் வழங்கு ஏற்பாடு ஆகியவை 500 மீட்டர் சுற்றுவட்ட பகுதிக்குள் இருந்தால் சிறு கனிமங்கள் ஏதும் வெட்டி எடுக்கக் கூடாது என சிறு கனிம சலுகை விதிகள் சட்டத்தில் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

இந்த ஊரில் இருக்கும் எல்லோருக்கும் தெரியும். இந்த குவாரி அமையக்கூடிய புலம் 441-க்கு கிழக்குப் பகுதியில் இருக்கக்கூடிய புலஎண். 459-ல் கீரனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலிருந்து கீரனூர் கிராமத்தின் தெற்கு பகுதியில் உள்ள நால்ரோடு செல்லக்கூடிய பாதைக்குமான மொத்த தூரத்திலும் இந்த வண்டிப்பாதை இருக்கிறது. அதே போல் குவாரியினுடைய வடக்கு பகுதியில் இருக்கக்கூடிய கீரனூர், மரவபாளையம் சாலையில் 5 ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டுள்ளது. மூன்று மோட்டார் அறைகள் உள்ளன. கல்குவாரிக்கு ஒரு விதிமீறல்கள் இருந்தாலே அனுமதி கொடுக்க முடியாது. அப்போது, இத்தனை விதிமீறல்களோடு இருப்பதை ஆதாரத்தோடு சொல்கிறோம். அதனால் இந்த

குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அதுமட்டுமல்ல 300 மீட்டர் சுற்றளவிற்குள் தற்காலிக நிரந்தர தொழிலாளர் குடியிருப்பு இருக்கக் கூடாது. காரணம், இந்த குவாரி வெடி வைக்கும் பொழுது, அந்த தற்காலிக நிரந்தர தொழிலாளர் குடியிருப்பில் இருக்கக்கூடிய நபர்களுக்கும் ஆபத்து ஏற்படும். ஏனென்றால் போன மே மாதம் 5ம் தேதி விருதுநகர் மாவட்டத்தில் ஆவியூர் என்ற இடத்தில் ஒரு குவாரியில் வெடி விபத்தில் அங்கிருந்த தற்காலிக குடியிருப்பில் இருந்த தொழிலாளர் 5 –6 நபர்கள் இறந்து விட்டார்கள். பல சம்பவங்கள் இங்கே நடக்கிறது. பல்வேறு விதமான செயல்முறை ஆணையில் உதவி இயக்குநர், கனிமத்துறையே இதனை கூறியிருக்கிறார்கள்.

திரு.விஷ்ணுகுமார் குவாரியை சுற்றி இருக்கக் கூடிய 300 மீட்டர் சுற்றளவிற்குள் எண்ணற்ற தற்காலிக குடியிருப்புகள் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஆதாரம் கேட்பார்கள் நாங்கள் இணையதள வரைபடத்தில் இருந்து கொண்டு வந்திருக்கிறோம். இணையதள வரைபடங்களில் இருந்து, விஷ்ணுகுமார் கல்குவாரியின் வடமேற்கு திசையில் 174, 226 மற்றும் 275 வது மீட்டரிலும், வடக்கு திசையில் 15, 218, 256 மற்றும் 272–வது மீட்டரிலும், மற்றும் வடகிழக்கு திசையில் 171–வது மீட்டரிலும் பல கட்டிடங்கள் இருக்கிறது. இது ஏதோ வாய் புளித்ததோ? மாங்காய் புளித்ததோ? என்று சொல்லவில்லை. அட்சரேகை, தீர்க்கரேகை அடிப்படையில் பல வீடுகள், இந்த குவாரியை சுற்றி இருப்பது இணையதள வரைபடங்களில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. எனவே கிராம வரைபடத்தின் அடிப்படையிலும், எதார்த்தத்திலும், ஊராட்சி மன்ற அனுமதியிலும் மற்றும் இணையதள வரைபட அடிப்படையிலும் பல தற்காலிக மற்றும் நிரந்தர குடியிருப்புகள் இருப்பதால் விஷ்ணுகுமார் கல்குவாரி இவ்வளவு விதிகளை மீறி இருக்கின்றது என கூறினார்.

அதேபோல, அடுத்ததாக சசிகுமார் கல்குவாரி புல எண்.449 பகுதி மற்றும் 450 முழுமையாக மொத்தம் 11 ஏக்கர் பரப்பளவில் அமைய இருக்கிறது. அதையும் இந்த கிராம வரைபடத்தில் காட்டுகிறோம். இதில் புல எண்.449–ல் இருந்து 300 மீட்டர் சுற்றளவில் அதாவது 285, 290 மற்றும் 295–வது மீட்டரில் புல எண்.455 மற்றும் 445–ல் பல வீடுகள் இருக்கின்றது. இது கிராம வரைபடத்திலேயே காட்டப்பட்டுள்ளது.

அதைவிட மிக முக்கியமானது என்னவென்றால், இந்த குவாரியினுடைய புல எண்.449–ல் அதன் தெற்குப்பகுதியில் ஓடை செல்கிறது. இது கிராம வரைபடம் மட்டுமின்றி கணினி புலவரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. அதே போல் லேடர் புல வரைபடத்திலும் (Ladder FMB) ஓடை இருப்பது காட்டப்பட்டுள்ளது. அனைத்து அரசினுடைய ஆவணங்களிலும் ஓடை செல்வது தெரிகிறது. அப்பொழுது ஓடைக்கு

சட்டப்படி ஐம்பது மீட்டர் இடைவெளி விடப்பட வேண்டும். ஆனால் புலஎண்.449–ல் ஓடைக்கு 30 மீட்டர் கூட இடைவெளி கிடையாது. மேலும் சுரங்கத் திட்டத்தில் அந்த ஓடையை காட்டவில்லை. அதேபோல், புல எண்.450–க்கு தென்புறம் உள்ள புல எண்.452–ல் உள்ள ஓடைக்கு 40 மீட்டர் தான் இடைவெளி இருக்கிறது. எனவே இந்த குவாரி இயங்க முடியாது.

நிறைய நபர்கள் இவ்வாறு கூறலாம், எங்களுடைய பட்டா நிலத்திற்குள் செல்கின்ற ஓடையை எப்படி நீங்கள் கேள்வி கேட்கலாம்? புறம்போக்கு நிலத்தில் உள்ள ஓடையாக இருந்தால் கேட்கலாம். பட்டா நிலம் என்பது யாருடையது? நாங்கள் விலை கொடுத்து வாங்கி இருக்கிறோம். எங்கள் சொத்து. அதற்குள் ஓடை இருப்பதை காட்ட வேண்டும் என்று என்ன அவசியம் இருக்கிறது. அந்த ஓடையை நாங்கள் அழிக்கலாம். மாற்றி அமைக்கலாம். என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்று. ஆனால் அதற்கு அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், நில அளவை துறை ஆணையர், அவர்களை கேட்டோம். அவர் என்ன சொல்கிறார் என்றால் வருவாய் துறை, நிலை ஆணை 26 பிரிவு 15 படி நிலவியல் பாதையாக மற்றும் நிலவியல் கால்வாய் என குறிப்பிடப்பட்டிருப்பினும், இவை பட்டா நிலத்தில் இருப்பினும் அவை அரசுக்கு சொந்தமானதாகும். இதில் ஆக்கிரமிப்பு ஏற்படுத்தப் பட்டிருப்பின் அதனை அகற்ற வட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது என்று தகவல் உரிமைச் சட்டத்தில் கொடுத்துள்ளார்கள். இதையே தான் உதவி இயக்குநர் அவர்களும் கொடுத்துள்ளார்கள். வருவாய் துறை, நிலை ஆணை 26 பிரிவு 15–ன்படி எந்த ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தாலும், சர்வேயர் கொடுத்தாலும், அதில் கிராம வரைபடம், புல வரைபடம், அ– பதிவேடுகளில் என்ன இருக்கிறதோ? அதைப் பார்த்து தான் கொடுக்க வேண்டும். நேரில் சென்று பார்த்தேன், ஒடையை காணவில்லை. மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள் என்றெல்லாம் கொடுக்கக் கூடாது என்று சுட்டிக் காட்டுகிறார்கள். அப்பொழுது இந்த ஓடைக்கு இடைவெளி இல்லாமல் சசிகுமார் கல்குவாரி இருப்பதால் சட்டப்படி சசிகுமார் கல்குவாரிக்கு அனுமதி தர முடியாது, தரக்கூடாது. அதேபோல, இந்த சசிகுமார் கல்குவாரி புலத்தை சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு உள்ளது. எனவே, சசிகுமார் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது என்று கூறினார்.

மேலும், சசிகுமார் அவர்களின் கல்குவாரி புல எண்.449 என்பது 449 பகுதி என குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 2 ஏக்கர் பரப்பளவு உடையது. அதை உட்பிரிவு செய்யவில்லை. ஒரு செண்ட் வீட்டு நிலம் வாங்குபவர் உட்பிரிவு செய்கிறார்கள். இந்த ஊரில் மட்டும் 70 ஏக்கர் வைத்திருப்பவர் நிலத்தை உட்பிரிவு செய்வதில்லை, பகுதி என போட்டுக் கொள்கிறார்கள். காரணம் இப்பொழுது இருக்கக்கூடிய கிராம

நிர்வாக அலுவலருக்கும், வட்டாட்சியருக்கும் தான் குவாரிப்பணி செய்ய அனுமதியளித்த பகுதி எது என தெரியும். அவர்கள் சென்று விட்டால், யாருக்கும் தெரியாது. இந்த வரைபடத்தை தேடி பிடித்து, ஆவணங்களை எடுத்துக்கொண்டு யாரும் வந்து சரிபார்க்க பார்க்க முடியாது. இவர்கள் 10 வருடத்திற்கு குவாரி இயக்குவதற்கு அனுமதி கேட்கிறார்கள். அப்பொழுது இதற்கு நில ஆவணம் கொடுக்கும் பொழுது அனைத்தையும் உட்பிரிவு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், இந்த குவாரி புலத்தினுடைய இணையதள வரைபடங்களை(Google Map) பார்த்தோம் என்றால் இந்த குவாரி புலத்திலிருந்து 300 மீட்டர் சுற்றளவிற்குள் வடமேற்கு பகுதியில் 183, 222, 250 மற்றும் 256 ஆகிய மீட்டர்களில் நான்கு வீடுகள் இருக்கிறது. தென்மேற்கு பகுதியில் 222.11 மற்றும் 222.14 மீட்டர்களில் இரண்டு வீடுகள் இருக்கிறது. தெற்குப் பகுதியில் 221 வது மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. அதேபோல், வடகிழக்குப் பகுதியில் 292 வது மீட்டரில் வீடுகள் இருக்கின்றது என இணையவழி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே, கிராம வரைபடத்திலும், இணையவழி வரைபடத்திலும் வீடுகள் இருப்பது காட்டப்பட்டுள்ளது. மேலும், தற்காலிக தொழிலாளர் குடியிருப்பும் இருப்பதால் சசிகுமார் கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்று தெரிவித்தார்.

அதேபோல ஓடைக்கு இடைவெளி இல்லாமல் இருப்பதால் சட்டப்படியான அனுமதியை சசிகுமார் கல்குவாரிக்கு கொடுக்க முடியாது. ஏற்கனவே சொன்னது போல, சிறு கனிம சலுகை விதிகள் அடிப்படையில் குவாரிப் புலத்தினுடைய 500 மீட்டர் சுற்றளவுக்குள் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, ஆழ்துளை கிணறு மற்றும் நீரேற்றும் நிலையங்கள் இருந்தால் அனுமதி கொடுக்கக் கூடாது. இந்த குவாரி புலத்தை சுற்றியும் 500 மீட்டர் சுற்றளவிற்குள் மேற்குப் பகுதியில், கீரனூர் என்ற ஊர் இருக்கிறது. மேலும், இதனுடைய வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் ஆழ்துளை கிணறு மற்றும் மேல்நிலைத் தொட்டி எல்லாம் இருக்கிறது. முகிலன் பேசுவது பொய் என்றால், அடுத்து பேச வருபவர்கள் இது போல் இல்லை என்று ஆதாரத்துடன் சொல்லுங்கள். நான் அனைத்தையும் புகைப்பட ஆதாரத்தோடும், வீடியோ ஆதாரத்தோடும், வரைபடத்தோடும் ஒவ்வொரு குறிப்பாக எடுத்து கூறி கொண்டிருக்கிறேன். எனவே மேல்நிலைத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் என இத்தனை பல விதிமீறல்களோடு இருக்கின்ற சசிகுமார் அவர்களுடைய கல்குவாரி சட்டப்படி இயங்குவதற்கு தகுதியானது இல்லை என தெரிவித்தார்.

எங்களுக்கு ஒரு மிகப்பெரிய கேள்வி என்னவென்றால் இங்கு அரசாங்கம் யார் நடத்துவது? மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கக்கூடிய அதிகாரிகள்

நடத்துகிறார்களா? அல்லது கல்குவாரி உரிமையாளர்கள் நடத்துகிறார்களா? என்று தெரியவில்லை. காரணம் என்னவென்றால், நிலத்திற்கான அனைத்து பொறுப்பும் மதிப்பிற்குரிய கோட்டாட்சியர் அவர்களுக்குத்தான் இருக்கிறது. ஆனால் இந்த குவாரி புலத்தை குறித்து 28.11.2024 அன்று எடுத்த கணினி வரைபடத்தைப் பாருங்கள் இது 16.5.2017–ல் வட்டாட்சியர் அங்கீகாரம் செய்து கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. இதில் குவாரி புலத்தின் வடக்குப் பகுதி 443 என குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் புலத்தின் வடக்குப் பகுதி 603 ஆகும். இது கிராம வரைபடத்தில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. அதாவது புல எண்.449 மற்றும் புல எண்.450–க்கு வடக்குப் பகுதி 603. அதேபோல் புல எண்.441–க்கு மேற்குப் பகுதி 603. ஆனால், அது 443 என அனைத்து கணினி வரைபடங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை ஏற்கனவே இங்கிருந்து மாறுதலாகி சென்ற வட்டாட்சியர் மரியாதைக்குரிய மயில்சாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் 2021–ல் லஞ்ச ஒழிப்பு குற்றச்சாட்டில் கைதான அந்த வட்டாட்சியரும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மோசடி ஆவணங்களை உருவாக்கியுள்ளார்கள் என தெரிவித்தார்.

புல எண்.443–ல் மூன்று ஹெக்டர் அதாவது 7 1/2 ஏக்கர் தான் இருக்க வேண்டும். ஆனால், புல எண்.602, 603 மற்றும் 443 – யை ஒன்றாக இணைத்து 443 என குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே புல எண்.443–ல் 15 ஏக்கர் உள்ளது. கணினி வரைபடத்தில் இத்தனை மோசடிகள் செய்துள்ளார்கள். உண்மைகளை மறைத்து மோசடியாக குவாரி உரிமையாளர்களுக்காக அரசுத்துறை அதிகாரிகள் செய்திருக்கிறார்கள் என்று ஆதாரத்தோடு தெரிவிக்கிறோம். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இனிமேல் இது போன்ற மோசடிகளை அரங்கேற்றம் செய்யக்கூடாது. கீரனூரை பொறுத்தவரை செல்வநாயகி அம்மன் கோயில் உட்பட இந்தப் பகுதியில் பல இலட்சக் கணக்கான மக்களுடைய குலதெய்வம் இருக்கக்கூடிய பகுதி. இந்த பகுதியில் குவாரி அமைக்க வேண்டாம். அவர்கள் கொடுக்கக்கூடிய ஆவணங்கள் நேர்மையானதாகவும் சட்டபடியும் இருந்தால் நாங்கள் எதுவும் பேச முடியாது. ஆனால், அனைத்து ஆவணங்களும் மோசடி ஆவணங்களாக இருக்கிறது. எனவே கணினி புல வரைபடத்தை பார்த்து எப்படி உண்மையை கூற முடியும்? எனவே, உடனடியாக இந்த மோசடியான ஆவணங்களை தயாரித்தவர்கள் மீதும், இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் கோட்டாட்சியர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதே போல், ஒரு குவாரிக்கு கருத்து கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்றால், 45 வகையான ஆவணங்கள் தேவை. அப்பொழுதுதான் முழுமையாக

கருத்துக்களை கூற முடியும். ஆனால், விஷ்ணுகுமார் கல்குவாரியினுடைய ஆவணங்களில் கிராம வரைபடமே வைக்கவில்லை. கூட்டு வரைபடம் வைத்திருக்கிறார்கள். சசிகுமார் குவாரிக்கு கிராம வரைபடம் வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த கிராம வரைபடத்தில் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், குவாரியினுடைய மையப்பகுதியில் இருந்து, தூர அளவீடு செய்திருக்கிறார்கள். சிறு கனிம சலுகை விதிகள் தெளிவாக சொல்லி இருக்கிறது. குவாரியினுடைய அட்சரேகை, தீர்க்க ரேகை அடிப்படையில் குவாரியின் வெளிமுனைப் பகுதியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவு அளவீடு செய்ய வேண்டும் என்று. ஏற்கனவே, இது போன்ற தவறான நிலையை குட்டபாளையம் ஆர். பி. பி குவாரிக்கு செய்த அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் தமிழ்ச்செல்வி அவர்கள் நான் அறியாமையின் காரணமாக செய்துவிட்டேன் என்று கூறி வட்டாட்சியருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். அதை எங்களுக்கு அறிக்கையாகவும் கொடுத்துள்ளார். ஏனென்றால் அதன் மீது நாங்கள் நீதிமன்றம் போனால் அவர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எந்த லஞ்சமும் கொடுக்காமல் கஷ்டப்பட்டு டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதி வருகிறார்கள். வந்தவர்கள் தன்னுடைய பொறுப்பை நேர்மையாக செய்யாமல் இருப்பதால், இந்த ஊர் அழிகிறது. ஆனால், கிராம நிர்வாக அலுவலர் இப்படியான மோசடியான ஆவணங்களை கொடுத்தால் என்ன செய்வது என்பது தான் கேள்வி. இது இந்த ஆவண புத்தகத்திலேயே இருக்கிறது. இப்படி 300 மீட்டர் சுற்றளவிற்குள் குவாரியின் உடைய வெளிமுனை பகுதியில் இருந்து அளவீடு செய்யாமல் குவாரியினுடைய மையப்பகுதியில் இருந்து அளவீடு செய்திருக்கிறார்கள் என்று கூறினார்.

எங்களுக்கு ஒரு பெரிய கேள்வி என்னவென்றால்? குவாரி உரிமையாளர்கள் ஒரு விண்ணப்பம் கொடுக்கும் பொழுது, அந்த விண்ணப்பத்தில் இந்த இடம் நாங்கள் குவாரிக்கு கேட்கிறோம். அந்த இடத்தில் எந்த வில்லங்கமும் இல்லை, எந்த விதமான நீதிமன்ற நடவடிக்கையும் இல்லை. மேலும் 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள், கோயில்கள், பள்ளிக்கூடம், அரசு கட்டுமானம் இந்த மாதிரியான எந்த நிலையான அமைப்புகளும் இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். அப்படித்தான் கிராம நிர்வாக அலுவலரும் சான்று கொடுத்துள்ளார்கள். சசிக்குமாருக்கு கொடுத்த சான்றும் விஷ்ணுகுமார் அவர்களுக்கு கொடுத்த சான்றும் இங்கு இருக்கிறது. இரண்டு பேரும் விண்ணப்பம் செய்த காலத்திலிருந்து ஒரு வருடம் கழித்து தான் கிராமநிர்வாக அலுவலர் சான்று கொடுத்திருக்கிறார். முதலில் விஷ்ணுகுமார் குவாரிக்கு விண்ணப்பம் கொடுத்த காலம் என்னவென்றால் 10.10.2022 விண்ணப்பத்துடன் கிராம நிர்வாக அலுவலர் சான்று செல்ல வேண்டும். அதற்குப் பிறகு அ–1 விளம்பரம் கொடுத்து, அ–1 விளம்பரத்தின் மீது கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை, நில வருவாய் ஆய்வாளரின் அறிக்கை, அதற்கு பின்னர்

வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் நேரில் சென்று புலத்தணிக்கை செய்து அறிக்கைகள் கொடுத்த பின்பு கனிமவளத்துறையில் எவ்வளவு கனிமம் வெட்டி எடுக்கலாம் என்று உதவி புவியியலாளர் ஆய்வு செய்து அறிக்கையை மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் கிராம நிர்வாக அலுவலர் 20.05.2023–ல் தான் அறிக்கை கொடுத்துள்ளார். அதாவது, 10.10.2022–ல் விண்ணப்பம் கொடுத்ததற்கு கிராம நிர்வாக அலுவலர் 20.05.2023–ல் தான் அறிக்கை கொடுத்துள்ளார். இது ஆங்கில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) புத்தகத்தில் பக்க எண்.119ஏ வில் இருக்கிறது.

கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கிய பிறகு அதன் அடிப்படையில் உயர் அதிகாரிகள் சான்று அளிக்க வேண்டும். ஆனால், இங்கு கிராமநிர்வாக அலுவலர் எல்லோரும் சான்று கொடுத்த பிறகு இறுதியாக சான்று கொடுத்துள்ளார் என்றால் இது எந்த சட்ட அடிப்படையில் நடைபெறுகிறது என்று தெரியவில்லை. அதேமாதிரி சசிகுமார் அவர்களுடைய கல்குவாரிக்கு அனுமதி கேட்டு 01.09.2021–ல் விண்ணப்பம் அளித்துள்ளார்கள். ஆனால், 20.04.2022–ல் தான் கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அனைத்து அதிகாரிகளும் அதாவது வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அறிக்கை கொடுத்த பிறகு அறிக்கை கொடுப்பதற்கு அவர் என்ன கலெக்டரா. கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை ஆங்கில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) புத்தகத்தில் பக்க எண்.119 ஏ வில் இருக்கிறது. குவாரி உரிமையாளர்கள் விண்ணப்பம் கொடுக்கும் பொழுது அந்த நிலத்தில் எந்த வில்லங்கமும் இல்லை என்றும், வீடுகள் மற்றும் கோவில்கள் இல்லை என்றும் அவர் அளிக்கும் சான்று தான் முதலில் இருக்க வேண்டும். ஆனால், எல்லோரும் கொடுத்த பிறகு கொடுக்கிறார். இங்கு மிகப்பெரிய மோசடி இதில் அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கிறது என தெரிவித்தார்.

மேலும், 45 வகையான ஆவணங்களையும் கொடுத்திருந்தீர்கள் என்றால், இப்படி ஒவ்வொன்றையும் எடுத்துக் கூற முடியும். அதனால் தான் குறிப்பிட்ட ஆவணத்தை வைக்காமல் விட்டு விடுகிறார்கள். இந்த இரண்டு குவாரிகளையும் பொறுத்தவரை வீடுகள் இருக்கிறது, ஓடை இருக்கிறது, 500 மீட்டருக்குள் ஆழ்துளை கிணறு இருக்கிறது. அதேபோல், ஆவணங்களின் அடிப்படையில் ஏற்கனவே இந்த பகுதியில் கீரனூர், நால்ரோடு, படியூர், எக்கட்டாம்பாளையம், பனியம்பள்ளி ஆகிய பகுதிகளில் 2022–ல் இரண்டு முறை இரண்டு ரிக்டர் அளவு நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இங்கு செல்வநாயகி அம்மன் கோயில் உட்பட பல குலதெய்வங்கள் இருக்கின்றது. இத்தனைக்கும் இந்த குவாரிகளுக்கு 300 மீட்டர் தள்ளி கோவில் இருந்தால் போதும் என்று விதி சொல்கிறது. ஆனால் நமக்குத்

தெரியும். இங்கே, வெடி வைக்கும் போது, அதிர்வு மூன்று கிலோ மீட்டர் வரை உணரப்படுகிறது என்று. சமீபத்தில் கோடங்கிப்பாளையம், விஜயலட்சுமி குவாரியில் ஏற்பட்ட அதிர்வு காரணம்பேட்டையில் உள்ள சூலூர் விமான நிலையத்திலும் உணரப்பட்டது என கூறினார்.

அது மட்டுமல்ல, இவர்கள் சொந்தமாகத்தான் சாலை அமைக்க வேண்டும் என்று விதி தெளிவாக சொல்கிறது. அதேபோல் சசிகுமார் மற்றும் விஷ்ணுகுமார் கல் குவாரிகளுக்கு ஏற்கனவே அனுமதி கொடுத்த போது எக்காரணம் கொண்டும் அரசுபாதையை பயன்படுத்த கூடாது சொந்த பாதையை தான் பயன்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் புல எண்.459–ல் உள்ள அரசினுடைய வண்டிப்பதையை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். மேலும், இதனுடைய வடக்கு பகுதியில் கீரனூர் முதல் மரவபாளையம் வரை செல்லக்கூடிய கிராம சாலை இருக்கிறது. கிராம சாலையில் பத்து டன் மட்டும் தான் போக வேண்டும் என்று தெளிவான உத்தரவு இருக்கிறது. சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள அத்தனை கிராமத்திலும் தகவல் பலகை வைக்க சொல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார். அது போல், இங்கே காங்கேயம் ஒன்றியத்தின் குட்டப்பாளையத்திற்கு கிராம சாலையில் பத்து டன்னிற்கு மேல் கொண்டு செல்லக் கூடாது என்ற தகவல் பலகை வைக்க வேண்டும் என வட்டார வளர்ச்சி அலுவலர் உத்தரவு பிறப்பித்துள்ளார். தற்பொழுது நாங்கள் வரும்பொழுது பார்த்தோம் 60 டன் முதல் 80 டன் எடையோடு வண்டி செல்கிறது. எட்டு வருடம் இருக்க வேண்டிய சாலை மூன்று மாதங்களுக்கு கூட இருப்பதில்லை. கிராம சாலையில் 10 டன் என்றால், டிராக்டரின் பாடி மட்டத்திற்கு கல்லோ, எம்.சாண்டோ ஏற்றினால் தான் வாகன எடையோடு சேர்த்து பத்து டன் ஆகும்.

ஆறு சக்கர வாகனத்தில் ஏற்றி சென்றால் 24 டன் வரும். 16 சக்கர வாகனத்தில் கொண்டு சென்றால் 48 டன் அளவு வரும். ஆனால், 90 டன் வரை கொண்டு செல்கிறார்கள். நாங்களே பல இடங்களில் பிடித்துக் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு அதிக எடையோடு கொண்டு செல்லும் பொழுது மக்களுடைய வரிப்பணத்தில் பல கோடி மதிப்பில் போட்டப்பட்ட சாலைகள் அழிக்கப்படுகிறது, சூறையாடப்படுகிறது. ஒரு கிலோ மீட்டர் கிராம சாலைகள் போடுவதற்கு 50 லட்சம் முதல் ஒரு கோடி வரை செலவாகிறது. தேசிய நெடுஞ்சாலைக்கு ஒரு கிலோமீட்டருக்கு 210 கோடி வரை செலவு செய்கிறார்கள். அப்பொழுது இங்கே 48 டன் மட்டுமே கொண்டு செல்லக்கூடிய 16 சக்கர வாகனங்கள் 90 டன் எடையோடு போனால், ஒரு ஐந்து வயது குழந்தை மேல் பூனை ஏறி விளையாடினால் பரவாயில்லை. யானை ஏறி மிதித்தால்? இந்த சாலைக்கான தகுதி இவ்வளவுதான்.

பலரும் கூறலாம், குவாரிக்காரர்கள் அதை செய்து கொடுத்தார்கள், இதை செய்து கொடுத்தார்கள் என்று. பல கோடி ரூபாய் மதிப்புள்ள சாலைகளை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த எடை மெஷினாவது நூறு டன்னுக்கு குறைவாக இருக்கிறதா? தேசிய நெடுஞ்சாலையிலேயே 48 டன் தான் அளவு என்று கூறினார்.

ஏற்கனவே இயங்கிய குவாரிகள் ஏக்கருக்கு 200 மரங்கள் வளர்த்து பசுமை அரண் அமைப்பதாக கூறினார்கள் ஆனால் யாரும் அமைத்ததில்லை. கம்பி வேலிகள் முறையாக அமைத்ததில்லை. இப்பொழுது தொடர்ச்சியாக நாங்கள் பிரச்சனை செய்து கொண்டிருப்பதால் கம்பி வேலி அமைப்பதை தொடங்கி உள்ளார்கள்.

அதேபோல் நாணல் வெடி என்று சொல்லக்கூடிய சத்தமே இல்லாத மட்புல் முறையில் வெடிக்கு மேல் ஈரத்துணியை வைத்து, சாக்கு மூட்டையை அடுக்கி, அதற்கு மேல் லாரி டயரை வைத்து அதிர்வே ஏற்படாத மாதிரி 28 வினாடிகளுக்கு ஒருமுறை வெடி வெடிக்கவேண்டும். அவ்வாறு நாணல் வெடிகளையே பயன்படுத்துவதாக திட்ட ஆலோசகர் கூறினார் ஆனால் அதன் விலை அதிகம் மற்றும் உற்பத்தித்திறன் குறைவாகத்தான் கிடைக்கும். அதனால் இவர்கள் சட்டவிரோதமான வெடிமருந்துகளையே அதிகமாக பயன்படுத்திகிறார்கள். இது நம் மாவட்டத்தில் தொடர் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் நம் மாவட்டத்தில் சட்டவிரோத வெடியை பயன்படுத்தி 7 பேர் இறந்து உள்ளார்கள் என கூறினார்.

எனவே, இந்த மண்ணை பாதுகாக்க, இயற்கையை பாதுகாக்க, பூமியை பாதுகாக்க, இங்கு இருக்கக்கூடிய செல்வநாயகி அம்மன் கோயிலை பாதுகாக்க, கீரனூர் ஊரை பாதுகாக்க, சசிகுமார் மற்றும் விஷ்ணுகுமார் ஆகிய இரண்டு கல்குவாரிக்கும் சட்ட ரீதியான அனுமதி கொடுக்கக் முடியாது. ஏற்கனவே இதே மண்டபத்தில் கடந்த ஆண்டு புல எண்.442 (பகுதி) – ல் அமைவதற்கான சசிகுமார் கல்குவாரி அமைவதற்கான கருத்து கேட்புக் கூட்டம் நடந்தது. அந்த கருத்து கேட்புக் கூட்டத்தில் ஆதாரத்தோடு சொன்னோம். ஆனால் அனுமதி கொடுத்தார்கள். அதற்குக் காரணம் குவாரி உரிமையாளர்கள் ஏக்கருக்கு 5 லட்ச ரூபாய் கொடுத்து அனுமதி பெற்றதாக குவாரி உரிமையாளர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த விதிமீறல் எல்லாமே இருக்கிறது. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையமே நாங்கள் தவறு செய்திருக்கிறோம், குற்றம் செய்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே இதன் அடிப்படையில் இந்த குவாரி, சட்டப்படி இயங்குவதற்கு தகுதியானது அல்ல. ஏற்கனவே கொடுத்த குவாரிகளுடைய அனுமதியையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே இங்கு முத்துசாமி என்பவரின் பெயரில் குவாரி இருக்கிறது. ஆனால் அதை எஸ்.ஆர்.கே குத்தகைக்கு எடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். குவாரியை உள் குத்தகைக்கு விடக்கூடாது. ஆனால் சட்ட விரோதமாக இதே கிராமத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் முத்துசாமி குவாரியில் வெடிவைத்து பொழுது அருகிலிருந்த வீடுகளில் கல் விழுந்து பாதிப்பு ஏற்பட்டது இப்படியான பல நிகழ்வுகள் மறைக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

எனவே உண்மையை நிலை நாட்ட வேண்டியது அதிகாரிகளுடைய கடமை. உண்மையை சொல்ல வேண்டியது எங்களைப் போல சமூக செயல்பாட்டாளர்களின் பொறுப்பு என்பதன் அடிப்படையில், இந்த மண்ணை இயற்கையை பூமியை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிறைவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2017 இல் அவருடைய முகநூல் பக்கத்தில் எங்களுடைய ஆலோசனையை கேட்டு, தமிழ்நாட்டினுடைய மணல் தேவைக்கு ஆற்று மணல் குவாரிகளை மூடிய நிலையில் 22.11.2017–ல் தமிழகத்தில் உள்ள இயற்கை வளங்கள் பறிபோவதை தடுக்கும் வகையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் விற்பனையை அனுமதிக்க குதிரை பேர அரசு மறுப்பது ஏன்? என்று கேட்ட கேள்விக்கு, எந்த பதிலும் இல்லை என்று தெரிவித்துள்ளார். எனவே அதன் அடிப்படையில் இங்கே செயற்கையான பாறைகளை வெட்டி உற்பத்தி செய்யும் மணலும் வேண்டாம். அதைப் போல், இங்குள்ள ஆறுகளிலும் மணல் எடுக்க வேண்டாம். வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக மலேசியா, இந்தோனேசியா போன்ற அடிக்கடி நில அதிர்வுகள் ஏற்படும் நாடுகளில் இருந்து இயற்கை ஆற்று மணலை ஒரு டன் 1000 ரூபாயிக்கு இறக்குமதி செய்து கொடுக்கலாம். இங்கே குவாரி உரிமையாளர்கள் டிசம்பர் 1ஆம் தேதியிலிருந்து ஒரு டன் ஐந்தாயிரம் ரூபாயிக்கு கொடுத்து வருகிறார்கள். அரசாங்கம் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தால் அரசுக்கு வருமானம் சேரும். இங்கே தனி நபர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னொன்று இங்கே உற்பத்தி செய்யக்கூடிய எம். சாண்ட்களின் தரத்தை யாரும் பரிசோதனை செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதனால் பரிசோதனை செய்ய தாலுக்கா வாரியாக ஆய்வு கூடம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சசிகுமார் மற்றும் விஷ்ணுகுமார் கல்குவாரி சட்டப்படி அனுமதி கொடுக்க தகுதியற்றது. இதையும் மீறி லஞ்சத்தை பெற்றுக்கொண்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி கொடுத்தால் அவர்கள் அத்தனை பேரும் சிறைக்குப் போக நேரிடும் என்பதை இதை பார்த்துக் கொண்டிருக்கிற மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே எங்களிடம் தாங்கள் செய்தது தவறு என்று மன்னிப்பு கேட்டுள்ளீர்கள். எனவே முறையாக சட்டப்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்தார்.

**2. திரு. நடராஜன், வெங்கலப்பாளையம்.**

கடந்த 20 ஆண்டுகளாக இப்பகுதியில் கல்குவாரி இயங்கி வருகிறது. இதே போல், திட்ட அறிக்கை தயார் செய்து மட்புல் முறையில் நாணல் வெடி வைத்து வெடிப்போம். பாதைக்கு தினமும் தண்ணீர் தெளிப்போம் எனக் கூறி அனுமதி வாங்கிவிட்டு இப்பொழுது டெட்டனேட்டர் வைத்து 100–200 குழிக்கு ஒரே வெடியாக வெடிக்கும் போது அருகில் இருக்கிற கால்நடைகள் எல்லாம் தொழுவத்திலிருந்து பயந்து ஓடிவிடுகிறது. இரண்டாவது, அந்த வெடிமருந்து புகை மற்றும் தூசுக்கள் அருகில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் எல்லாம் படிந்துள்ளதால் சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் கால்நடைகள் எல்லாம் மேய்ச்சலுக்கு விட முடியவில்லை. மேலும் குவாரி உரிமையாளர்களிடம் முறையிட்டால் அலட்சியப்படுத்துவதுடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. அனுமதி வாங்கும் முன் திட்ட அறிக்கையின் படி நடப்பதாக கூறி அனுமதி பெற்று பின் முறையாக செயல்படுத்துவதில்லை. மேலும் பாதைக்கு தண்ணீர் தெளிப்பதில்லை மற்றும் குவாரியை சுற்றி கம்பி வேலி அமைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அதே போல இருநூறு பசுமை மரங்கள் நடுவோம் என்று திட்ட அறிக்கையில் கூறியுள்ளார்கள் ஆனால் இருபது ஆண்டுகள் ஆனபின்பும் ஒரு பசுமைமரம் கூட நடவில்லை. மேலும் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்தால், அந்த விவசாய நிலங்களை தங்களுக்கே கொடுத்துவிட்டு சென்று விடுமாறு கூறுகிறார்கள். சந்தை மதிப்பில் ஐம்பதுலட்சம் ரூபாய் மதிப்புள்ள பூமியை மற்றவர்கள் மூலம் பதினைந்து இலட்சத்திற்க்கு, குறைவாக மதிப்பிட்டு கேட்கிறார்கள். குவாரி உரிமையாளர் அவர்கள் பதினைந்து இலட்சத்திற்கு கேட்கும் பூமியை தான் இருபது இலட்சம் ரூபாய்க்கு வாங்கிக் கொள்வதாக கூறுகிறார்கள். எனவே குவாரியை சுற்றியுள்ள விவசாய பெருமக்கள் யாரும் ஏமாற வேண்டாம் என்று கூறினார். தற்பொழுது கல்குவாரிக்கு உரிமம் கொடுத்துவிட்டால், சுற்றியுள்ள விவசாயிகள் அனைவரும் அகதிகளாக மாறி விடுவார்கள் என்று தெரிவித்து, இந்த கல் குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

**3. திரு. சிவசாமி, சிவன்மலை.**

குவாரியில் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவதாக திட்ட ஆலோசகர் கூறினார். ஆனால் எந்த கல் குவாரியிலும் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில்லை. பசுமை வளையம் அமைப்பதாகவும், ஏக்கருக்கு 300 மரங்கள் வைத்து வளர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு மரம் கூட இன்று வரை எந்த

குவாரிகளிலும் வைத்தது கிடையாது. மேலும் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை இங்குள்ள அனைத்து குவாரிகளிலும் நேரில் சென்று ஆய்வுசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் நாங்கள் தொழிலுக்கு விரோதி கிடையாது. மக்களுக்கு, கால்நடைகளுக்கு, பறவை இனங்களுக்கு, பல்லுயிர் பெருக்கத்திற்கு பாதிப்பு இல்லாமல் தொழில் செய்தால் எங்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது. ஆனால் யாருமே அவ்வாறு செய்யாத காரணத்தினால் காற்று மாசு, மண் மாசு மற்றும் நீர் மாசு ஏற்படுகிறது. அரசு அதிகாரிகள் தங்களுடன் தங்கும் பட்சத்தில் எங்களின் பிரச்சனைகளை அறிய முடியும். சட்ட பூர்வமாக வெடி வெடிப்பதற்கான நேரம் மதியம் 1.00 மணி முதல் 2.00 மணி வரை என்கிறார்கள். ஆனால் மதியம் 1.00 மணி முதல் 2.00 மணி வரை வெடி வைக்காமல், மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை வெடிக்கிறார்கள். அச்சமயம் பால் கறவை நேரமாக இருப்பதால், அதிக சத்ததுடன் வெடிக்கும் பொழுது, மாடுகள் பயந்து ஓடி விடுவதுடன், கற்கள் அருகில் விழுகின்றன. குவாரி உரிமையாளர்களிடம் தெரிவிக்கும் பொழுது குவாரி உரிமையாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று தெரிவித்தார்.

**4. திரு. சேகர், மரவப்பாளையம்**

எனது காட்டிற்கு அருகிலேயே புல எண். 407/1 (பகுதி), மற்றும் புல எண். 407/2 (பகுதி) ல் சந்தோஷ் கல் குவாரி என்பதை இயக்கி மூடிவிட்டார்கள். அக்குவாரிக்குள் வெடித்த எட்டு டிப்பர் அளவிளான கல் என் காட்டிற்குள் விழுந்துள்ளது. மேலும் பலமுறை முறையிட்டும் மனுகொடுத்தும் கம்பிவேலி அமைக்காமல் வைத்திருந்தார்கள் என்று கூறினார்.

இதற்கிடையே மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், இடையிட்டு – கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டுள்ள கல்குவாரிகைளை பற்றி மட்டுமே பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் கால் நடைகளை வளர்க்க முடியாத நிலை உள்ளது. பாறைக் குழிக்கு அருகில் ஒரத்தபாளையம் அணை இருக்கிறது. அங்கு வசிக்கும் மான்கள் குவாரிக்குள் விழுந்து இறந்து விடுகிறது. இது சம்பந்தமாக பலமுறை, கோட்டாட்சியர் அவர்களிடமும், மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கும், வருவாய் துறைக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் மனுக் கொடுத்துள்ளேன். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையுமே எடுக்க வில்லை. குவாரிகளில் எந்த விதிமுறையும் கடைபிடிப்பதில்லை, நேர கட்டுப்பாடு இல்லாமல், வெடி வைப்பதால் வீடுகளில் தூசிகள் பரவி அலர்ஜி போன்ற பாதிப்புகளால் மக்கள் மருத்துவமனைக்கு செல்கிறார்கள் என்று கூறினார்.

குவாரியை இயக்கி மூடிவிட்டு சென்று விட்டார்கள் எனில் இப்பிரச்சனையை நாங்கள் யாரிடம் சொல்வது. தலைமைச் செயலர் உத்தரவு படி மூடப்பட்ட கல் குவாரிகளை சுற்றிலும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்ற விதிமுறையின் படி இக்குவாரியை சுற்றிலும் கம்பி வேலி அமைக்க 15 முறை மனு கொடுத்தும் வட்டாட்சியர் இன்று வரை ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் மீது உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும் என்று அனைத்து துறைகளிலிலும் மனு கொடுத்துள்ளேன். மேலும் கல் குவாரி இயக்கக் கூடாது என்றெல்லாம் இல்லை. சட்ட விதிகளை முறையாக பின் பற்றினார்கள் எனில் அக்குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

**5. திரு. சக்திவேல்முருகன், செயலாளர், திருப்பூர் மாவட்ட ஒப்பந்ததாரர் சங்கம்**

நாங்கள் செய்யக் கூடிய பணிகள் முழுவதும் அரசு சார்ந்த பணி. அந்தப் பணிக்கு தேவையான மூலப் பொருட்கள் 75 சதவீதம் கல் குவாரியின் மூலம் கிடைக்கிறது. இதனை அடிப்படையாக கொண்டே அரசு பணி செய்து முடிக்க வேண்டியுள்ளது. தற்போதைய முதலமைச்சர் அவர்கள் குறுகிய காலத்தில் நல்ல திட்டங்களை நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தோடு சாலை பணிகளையும், பல திட்டப் பணிகளையும் துவக்கியுள்ளார்கள். அந்தப் பணிகளை செவ்வனே செய்து முடிப்பதற்கு, தேவையான எம்சாண்ட், ஜல்லி மற்றும் கிராவல் போன்ற மூலபொருட்கள் கிடைப்பதற்கு பெரிதும் இடையூறு மற்றும் காலதாமதம் ஏற்பட்டு பணிகளை, உரிய நேரத்தில் முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக குவாரி உரிமையாளர்களிடம் கேட்கும் போது சுரங்கச் சட்டத்தின் படி இவ்வளவு கற்கள் தான் உடைக்க வேண்டி இருக்கிறது. இவ்வளவுதான் உடைப்போம். இவ்வளவு தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். பல குவாரிகளில் உரிய உரிமங்கள் வழங்கப்படாததால் குவாரியை இயக்கவில்லை என்று ஒவ்வொரு குவாரி உரிமையாளர்களும் கூறுகிறார்கள்.

பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. எனினும் குவாரி நடந்து கொண்டிருக்கிறது. நான் அரசு ஒப்பந்ததாரர். புவியியலாளர் இந்த இடத்தில் நீரூற்று இருக்கிறது அங்கே தான் ஆள்துளை கிணறு அமைக்க வேண்டும் என்று கூறுகிறார். எனினும் குவாரி அருகில் தான் இருக்கிறது. பொதுமக்களுக்கு தண்ணீர் தேவைப்படும் இடத்தில் தான் ஆழ்துளை கிணறு அமைக்க முடியும். அந்த இடத்தில் ஆழ்துளை கிணறு அமைத்ததினால் குவாரிக்கு உரிமம் கொடுக்கமாட்டேன் என்று சொல்வது, ஏற்புடையது அல்ல. பொது மக்கள் பயன்பாட்டிற்கு தண்ணீர் தேவை. அதே சமயம் திட்டப் பணிகள் நிறைவேற்ற ஜல்லி, எம்.சாண்ட் போன்ற மூலப் பொருட்கள் தேவைப்படுகிறது என்று கூறினார்.

சில கல் குவாரி உரிமையாளர்களின் முறையற்ற செயல்களை கண்காணித்து, அதற்கு தீர்வைகண்டு அனுமதி வழங்க அரசு அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு அறிவித்த "கலைஞர் கனவு இல்லம்" என்ற திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான வீடுகளின் கட்டுமான பணிகள் ஆயத்த நிலையில் உள்ளது. எனினும் கட்டிட மூலப் பொருளான எம்.சாண்ட்டிற்கு மிகவும் தட்டுப்பாடான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் இத்திட்டம் முழுவதும் காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த குவாரிகளுக்கு உரிமத்தை உடனடியாக வழங்கி, மூலப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**6. திரு. பிரபாகரன், கீரனூர்**

குவாரியில் நாங்கள் வெடிப்பதற்கு முன் அனைவரிடமும் முறையாக அறிவித்த பின்பு வெடி வெடிக்கிறோம். இந்தக் குவாரியின் மூலம் முப்பது முதல் நாற்பது நபர்கள் வரை ஒரு குவாரியில் வேலை செய்தவதால் அதிக குடும்பங்கள் பயன்பெறுகின்றன. இதனால் குவாரி வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் தான் வெடித்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் முறையாக அனுமதி கொடுத்து, எங்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**7. திரு. லோகநாதன், கணபதிபாளையம்.**

பாறையை உடைப்பதற்கு இரண்டு நபர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள். அதிகாரிகளுக்கு எவ்வாறு அனுமதி கொடுக்க வேண்டும் என்று தெரியும். சட்டத்திற்குட்பட்டு, நீங்கள் அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று என் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன். பாறை உடைத்தால் தான் கிரசர் இயங்கும். கிரசர் இயங்கினால் தான் எம்.சாண்ட், பி.சாண்ட் போன்ற மூலப்பொருட்கள் கிடைக்கும். ஒரு கிராம சாலை போடுவதாக இருந்தாலும் கூட அதற்கு ஜல்லி, எம்.சாண்ட், பி.சாண்ட் தேவைப்படுகிறது. பத்துக்கு பத்து அறை அமைத்தால் கூட மூலப்பொருட்கள் தேவைப்படுகிறது. நீங்கள் சட்டம் குறிக்கிடுகிறது என்று கூறி, அவர்களுக்கு அனுமதி கொடுக்காமல் இருந்தால், பொதுமக்கள் தான் பாதிப்படைவார்கள் என்று கூறினார்.

**8. திரு. சூரியக்குமார், கீரனூர்**

நான் லாரி வைத்து, பொருட்கள் விநியோகம் செய்து கொண்டிருக்கிறேன். இந்த குவாரி இயங்குவதன் மூலம் எங்கள் லாரி இயங்குகிறது. லாரி மூலமாக நிறையே வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. இங்கே குவாரி உரிமம் இல்லையென்றால், நாங்கள் கரூர் வரை வெகுதூரம் சென்று பொருட்கள் எடுத்து வந்து விநியோகம் செய்ய வேண்டி இருக்கிறது. அதனால், நம் கட்டுமானத் துறைக்கும்

உள்கட்டமைப்புத் துறைக்கும் முக்கியமான ஒன்றாக அமைகிறது. அதனால், உரிய விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் இந்த குவாரிகளுக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**9. திரு. பழனிச்சாமி. சேடர்பாளையம்**

நாங்கள் இரண்டு லாரி வைத்திருக்கிறோம். மகன், மகள் எல்லோரும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த குவாரிகளுக்கு உரிமம் வழங்கினால் தான் நாங்கள் வாழமுடியும். இல்லையென்றால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும், நாங்கள் கரூர் சென்று மூலப்பொருட்கள் கொள்முதல் செய்தால் அதிகம் செலவாகும். எனவே இங்கே உள்ள கல்குவாரியில் எம்.சாண்ட், பி.சாண்ட் எல்லாம் கொள்முதல் செய்கின்றோம்.எனவே, இந்த குவாரிகளுக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**10. திரு. சக்தி, நால் ரோடு**

நான் டிராக்டரில் எம்.சாண்ட், பி.சாண்ட் எடுத்து விற்பனை செய்யும் டிரேடிங் தொழில் செய்து வருகிறேன். வெளியூரில் இருந்து மண் இறக்குமதி செய்தால் அதன் கட்டுமானச் செலவு அதிகமாகும். இதனால், பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். மூலப்பொருட்கள் அருகில் கிடைத்தால் எளிதாக இருக்கும். தற்போது எம்.சாண்ட் மற்றும் பி.சாண்ட் பொதுமக்களின் அத்தியாவசியப் பொருட்களாக உள்ளது. இந்த குவாரியை துவங்குவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**11. திரு. சேகர், நால் ரோடு**

2009–ல் திருப்பூர் மாவட்டம் ஆரம்பித்த போது, 367 குவாரிகள் அனுமதியோடு இயங்கிக் கொண்டிருந்நது. தற்போது, 93 குவாரிகள் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அன்றைக்கு 1500 ரூபாய்க்கு இருந்த ஜல்லி, இன்று ஒரு யூனிட் நான்காயிரம் ரூபாய் விற்பனை செய்கிறார்கள். இந்த குவாரிகளுக்கு அனுமதி தடைசெய்யும் பட்சத்தில் ஜல்லி விலை, எம்.சாண்ட் விலை உயர்ந்து கொண்டு இருக்கும்.

நான் ஒரு அரசு ஒப்பந்ததாரராக காங்கேயத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். இதனால் கட்டுமானப்பணி மிகவும் பாதிப்படைகிறது. தேவையான அளவிற்கு ஜல்லி, எம்.சாண்ட் கிடைப்பதில்லை. எனவே இந்த இரண்டு கல் குவாரிகளுக்கும் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**12. திரு. வீரக்குமார், முத்தூர்**

நான் நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர் கூட்டமைப்பின் பிரதிநியாக உள்ளேன். இப்பொழுது, நம் கொங்கு மண்டத்தில் குவாரிகள் மிகவும் குறைவாக

இருக்கிறது. திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரியில் எல்லாம் குறைவாக இருக்கிறது. இதனால் ஜல்லி விலையெல்லாம், இப்பொழுது நான்காயிரம் ரூபாய் என்று இருக்கிறது. இன்னும் கூடுதல் குவாரிகளுக்கு உரிமம் தடை செய்தால் கட்டுமானத் தொழிலே செய்ய முடியாத நிலை ஏற்படும். இந்த இரண்டு குவாரிகள் மட்டுமல்ல, இன்னும் கூடுதல் குவாரிகளுக்கு அனுமதி கொடுத்து, விலையை குறைத்து, கட்டுமான தொழில்துறையை முன்னேற்றம் செய்ய வேண்டி, அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**13. திரு. பாலசுப்பிரமணியம், தம்மரெட்டிபாளையம்**

பொதுமக்களுக்குத் தேவையான, அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம், அதில் உணவு விவசாயத்தில் வந்து விடுகிறது. உடை நெசவுத் தொழில் மூலமாக வருகிறது. இருப்பிடம் என்றால் அனைவரும் தார்சு வீடுகள் தான் கட்டுகிறார்கள், யாரும் ஓலை கூரையோ, ஓட்டு வீடோ கட்டுவதில்லை. மேலும் தார்சு வீடுகள் கட்டுவதற்கு தேவையான மூலப்பொருட்கள் அனைத்தும் குவாரி மற்றும் கிரஷர் தொழில் மூலம் கிடைக்கிறது. வேறு எங்கும் கிடைக்காது. மேலும் ஹாலோ பிளாக் தயாரிப்பில் மூலப் பொருட்களாக பயன்படுகிறது. எனவே குவாரிகளின் எண்ணிக்கை குறைந்ததன் தாக்கம் பொதுமக்களுக்குத் தேவையான, அடிப்படை மூலப் பொருட்களான எம்.சாண்ட், பி.சாண்ட், ஜல்லி என அனைத்தின் விலையும் உயர்ந்து இருக்கிறது. மேலும் ஊராட்சியில் மக்களுக்கு தேவையான பணிகளான கான்கிரீட் சாலை, பாலம் அமைப்பதற்கு மூலப்பொருட்கள் கட்டாயம் தேவைப்படுகிறது. இந்தக் குவாரியில் இருந்து வரக்கூடிய வருவாயானது, மாநில அரசுக்கோ, மத்திய அரசுக்கோ போவதில்லை. முழுக்க முழுக்க உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் வருகிறது என்று கூறினார்.

கீரனூரில் உடைக்கக்கூடிய குவாரியில் இருந்து கிடைக்கும் வருமானம், அவர்கள் செலுத்தக்கூடிய பர்மிட் தொகையில் 75 சதவீதம் ஊராட்சிக்கே சென்றுவிடும். மீதமிருக்கும் 25 சதவீதம், எங்களைப் போல் அருகில் இருக்கின்ற ஊராட்சியில் இருக்கக்கூடிய மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு கொடுக்கிறார்கள். இந்த உரிமத்திற்கு அவர்கள் விண்ணப்பம் கொடுக்கும்போதே, CSR Fund என்று தொழிலில் கிடைக்கக்கூடிய லாபத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை மக்களின் பொதுச் சேவைக்காக ஒதுக்கி வைத்து, அதிலிருந்து இப்போது, கீரனூர் பள்ளிக் கூடத்திற்கு ஏழு. எட்டு இலட்ச ரூபாய்க்கு மேல் பணிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று விவரித்தார்.

மேலும் ஒவ்வொரு உரிமம் வாங்கும் போது, அவர்கள் ஒரு பள்ளிக் கூடம், ஒரு பொது வேலை என்று அனைத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளுக்கு 75 சதவீத வருவாய் கிடைக்கிறது, உதாரணமாக கீரனூர்

ஊராட்சியில் இந்த இரண்டு குவாரி செயல்படுகிறது என்றால், இவர்கள் கட்டக்கூடிய ப்ர்மிட் தொகை பத்து இலட்சம் ரூபாய் வரி செலுத்துகிறார்கள் என்றால், அதில் ஏழுரை இலட்ச ரூபாய் இந்த கீரனூர் ஊராட்சிக்கே வந்து விடும்.

கீரனூர் ஊராட்சியில் இருக்கக் கூடிய குடிநீர் தேவை கான்கிரீட் சாலை, அனைத்தும் அந்த நிதியை வைத்து செய்ய முடியும். அதனால் இந்த ஊராட்சி தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்த ஊராட்சிக்கு தேவையான பணத்தை நாம் மத்திய, மாநில அரசை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நாம் ஒரு குடிநீர் இணைப்பு வழங்குவதாக இருக்கட்டும். ஆழ்துளை கிணறு அமைப்பது என்பதாகட்டும், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டுவதாக இருக்கட்டும், எல்லாவற்றிற்கும் தேவையான நிதியை இதன் மூலம் அந்த ஊராட்சிகளுக்கு கிடைக்கின்றது. அருகில் இருப்பவர்களிடம் பிரச்சனை இருந்தால் அதனை தீர்த்து, எந்தவித இடையூறும் யாருக்கும் இல்லாத வகையில் நல்ல முறையில் தொழில் நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். மக்களினுடைய அடிப்படை தேவைகளான இந்த மூலப்பொருள் பற்றாக்குறையை தீர்வு செய்வதற்காக அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**14. திரு.பி.சி. துரைசாமி, தம்மரெட்டிபாளையம்**

விஷ்ணுகுமார் மற்றும் சசிக்குமார் இருவருடைய கல்குவாரி, மண் குவாரிக்கு அனுமதி கேட்டு, கீரனூர் பகுதியில் வாழும் பொதுமக்களிடம் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்படுகிறது. ஆனால் சென்னிமலை, கோயம்புத்தூரில் இருந்து இங்கு வந்து, மான் விழுந்து விட்டது, வெடி வைக்கிறார்கள். என்றால் அந்த உரிமையாளர்களை அணுகி குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். மான் விழுந்தால், வனத்துறை அதிகாரிகளிடம் கூறினால் அவர்கள் கம்பி வேலி அமைப்பார்கள் என்று கூறினரர்.

இந்த பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். வேலை வேண்டும் என்று யார் இதுவரை குவாரி உரிமையாளரிடம் வந்திருக்கிறார்கள். எத்தனை நபர்கள் வந்தாலும், வேலை கொடுக்கத் தயார். வேலையாட்கள் இல்லாமல், வெளி ஆட்களை வைத்துத்தான் வேலை செய்கிறார்கள். ஆகவே, இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கருத்து கொடுக்கலாமா வேண்டாமா என்பது தேவையற்றது என்று கூறினார்.

விஷ்ணுகுமார் மற்றும் சசிக்குமார் இந்த இரண்டு நபர்களுமே தம்மரெட்டிபாளையம் பள்ளிகூடம், கீரனூர் பள்ளிகூடம் மற்றும் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்குக் கூட ஜல்லி, எம்.சாண்ட் அதிகளவில் கொடுத்து

உதவியிருக்கிறார்கள். குவாரிக்கு உரிமம் வழங்க அரசு அதிகாரிகள், சுற்றுச்சூழல் அதிகாரிகள், வட்டாட்சியர் மற்றும் இதற்கு மேல் உள்ள உயர் அதிகாரிகள் விஷ்ணுகுமார் மற்றும் சசிக்குமார் குவாரி உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**15. திரு.ஆஞ்சநேயா, சுற்றுச்சூழல் சமூக செயல்பாட்டாளர்**

இங்கு அமையவிருக்கின்ற குவாரிகளுக்கு ஆதரவு கடிதம் அளிப்பதாக தெரிவித்தார்.

**முடிவுரை**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் வடக்கு அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து பூர்வமான மனுக்களை வருவாய் கோட்டாட்சியர், தாராபுரம் அவர்களிடம் கொடுக்குமாறு தெரிவித்துக்கொண்டு இத்துடன் இந்த கருத்துகேட்புக் கூட்டம் முடிவு பெற்றதாக அறிவித்தார்.

மேலும், திரு.B. விஷ்ணுகுமார் என்பவர் புல எண். 441/ஏ1 (ப), ஏ2(ப), ஏ3 (ப) & எ4 (ப) மற்றும் திரு.P. சசிக்குமார் என்பவர் புல எண். 449 (ப) & 450 ஆகிய புல எண்களில் புதியதாக குவாரிகள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கல்குவாரி அமைத்தல் தொடர்பாக பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தின் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 10 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தில் பங்கேற்றோர் (71 நபர்கள்) பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய செருகு பதிவி ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருப்பூர் வடக்கு.**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**தாராபுரம் வட்டம்,**
**திருப்பூர் மாவட்டம்.**

**இணைப்பு**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு.
2. பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியின் நகல்.
3. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள்.
4. பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் – 10 எண்கள்.